கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச
சிறுதானிய ஆண்டு
2023

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 14.08.2024

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நூலகத்தில் தேசிய நூலகர் தினவிழா

இந்திய நூலகத் தந்தையான முனைவர் எஸ்.ஆர்.இரங்கநாதன் அவர்களின் பிறந்த தினம் தேசிய நூலகர் தினவிழாவாக நம் நாட்டில் கொண்டாடப்படுகிறது. இதனை ஒட்டி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நூலகத்தில் மாணவர் நல மையத்தின் சார்பில் தேசிய நூலகர் தினவிழா 12.08.2024 அன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டபது. மாணவர்கள் நூலகம் மற்றும் நூல்களின் சிறப்பை அறிந்து கொள்ளும் விதமாகவும், நூல்களைப் படிக்கும் பழக்கத்தினால் ஏற்படும் நன்மைகள் பற்றியும் அறிந்துகொள்ள இந்நிகழ்ச்சி பயனுடையதாக அமைந்தது. மாணவர்களின் படிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கவும் அவர்களின் நூலக வருகையை அதிகப்படுத்தவும் பல்வேறு விதமான போட்டிகள் நடத்தப்பட்டு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

மாணவர் நல மைய முதன்மையர் முனைவர் நா.மரகதம், அவர்கள் நிகழ்ச்சிக்கு தலைமையேற்றார். அவர் தமது உரையில் மாணவர்களுக்கு வாசிப்பின் முக்கயத்துவத்தையும் அதன் மூலம் அவர்கள் பெறும் ஞானத்தின் பயன்களையும் எடுத்துரைத்தார். கோவை, எஸ்.என்.வி குளோபல் பள்ளியின் ஆங்கில ஆசிரியரும் முதல்வருமான முனைவர்.சி.சாம்சன் அவர்கள் தமது உரையில் நூலகத்தின் முக்கியத்துவத்தையும் நூலகர்களின் பெருமைகளையும் மாணவர்களுக்கு எடுத்துரைத்தார். இந்நிகழ்வில் மண்ணியல் பேராசிரியர் மற்றும் நூலகப் பொறுப்பாளர் முனைவர் கே.எம்.செல்லமுத்து அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். ஆங்கிலப் பேராசிரியர் முனைவர்.கே.தங்கராஜ் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். இவ்விழாவிற்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஓய்வு பெற்ற நூலகர்களான பேராசிரியர் கே.பாலசுப்ரமணியன், திரு.ஆர்.போரையன், முனைவர் கே.பெருமாள்சாமி ஆகிய மூவரும் கௌரவப்படுத்தப்பட்டனார். அவர்கள் தங்களின் அனுபவங்களை மாணவர்களிடம் பகிர்ந்து கொண்டனர். இறுதியாக முனைவர் சி.ராணி, நூலகர் (பொறுப்பு) அவர்கள் நன்றியுரையாற்றினார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**